திருவள்ளுவர் ஆண்டு 2045

ஆகஸ்ட் - 2015

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 59

பகுதி : 10

விலை ரூ.10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A.,	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS	துணைத் தலைவர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	உறுப்பினர்
திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. க.சி. அகமுடைநம்பி B.E.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L.,	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. பெ.சந்திரசேகரன்	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59
பகுதி : 10
ஆகஸ்ட் : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள்கட்டணம்	ரூ. 1,000	ரூ. 6,000
புரவலர் கட்டணம்	ரூ. 5,000	ரூ. 10,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

செயலாளர்

ச.மாரியப்ப முரளி, எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.

பொருளடக்கம்

1. தர்மம், அறம் - பொருண்மை, வழக்கு — 7
பேராசிரியர் தி.முருகரத்தனம்

2. தலித் இலக்கியமும் இலக்கிய இயக்கங்களும் — 14
முனைவர் உ.கருப்பத்தேவன்

3. சங்க இலக்கியங்களில் வேட்டைத் தொழில் — 28
பேராசிரியர் பெ.சுயம்பு

4. அரிட்டாபட்டி — 37
முனைவர் வெ.வேதாசலம்

இதழ் மணம்

பேராசிரியர் தி.முருகரத்தனம் திருக்குறள்துறைத் தலைவராக மதுரைப் பல்கலைக்கழகத்தில் நீண்ட நெடுங்காலம் பணியாற்றினார். உலகம் முழுவதும் பலமுறை சுற்றிப் பல்வேறு தரப்பட்ட அறிஞர் பெருமக்களோடு கல்வி சார்ந்த கலந்துரையாடல்களில் பங்கு கொண்டுள்ளார். அவர் தெளிந்த உண்மைகளை இக்கட்டுரையில் பகிர்ந்து கொள்வது கல்வியாளர் சிந்தனைக்கு விருந்தாகலாம்.

திருக்குறளில் சமயப் பார்வை இல்லை; சமயம் சார்ந்த ஆச்சாரம், ஒழுகலாறுகள், அறம் பேசப்படவில்லை; திருக்குறள் பேசுவது மனித இனம் முழுவதையும் தழுவி நிற்கும் அறமும் ஒழுக்கமும் ஆகும். சமயக் கருத்துக்களை திருக்குறளோடு இணைத்துப்பேசுவது உரை ஆசிரியர்கள் திருக்குறளின் அறிவியல் வாழ்வியல் கூறுகளைப் புரிந்து கொள்ளாத போக்கேயாகும். இந்திய நாட்டில் கல்வி என்பது சமயங்களோடு இணைந்ததாகக் கற்பிக்கப்படுகிறது. அதனால் மக்கள் மதங்களின் அடிப்படையில் பிரிந்து அறம் என்பதே சமயங்கள் பேசுகின்ற கோட்பாடுகள் என்று சிந்திக்கிறார்கள். அதன் விளைவாக உரையாசிரியர்கள் மதக்கருத்துக்களைத் திருக்குறளில் சார்த்தி எழுதும் வழக்கம் வந்துவிட்டது. திருக்குறள் உலகமாந்தர் அனைவருக்கும் பொதுவான அறிவார்ந்த உண்மைகளை அறிவியல் நோக்கில் பேசுகிறது. மதங்களுக்கு அப்பாற்பட்ட மானிட இனம் தழுவிய மெய்மைகளையும் மனித இனம் பகைமையற்ற அறிவு அறஒழுக்கங்களைப் பேணும் நெறியையும் பேசுவது திருக்குறள் என்பதைப் பேராசிரியர் தி.முருகரத்தனம் விளக்கும் திறம் திருக்குறள் மறுவாசிப்புக்குரியது. அவர்கள் வெளியிட்டுள்ள "வள்ளுவர் முப்பால் அறத்துப்பால் உரையும் உரைவும்" என்னும் நூல் திருக்குறள் ஆர்வலர்கள் கற்க வேண்டிய நூலாகும்.

முனைவர் உ.கருப்பத்தேவன், "தலித் இலக்கியம்" குறித்த கட்டுரை தலித் மக்களின் சமூக அவலங்களையும் காலங்காலமாக இலக்கியங்கள் தலித் மக்களின் அவலங்களை இலக்கியங்களில் குறிப்பிடுவதையும் வரலாற்றுநோக்கில் வெளியிடுவதோடு, "ஆதிக்க அரசியல், சுரண்டல் பொருளாதாரம், ஆணாதிக்க

சமூகத்தின் விளை பொருட்களான சாதி, மதம், குடும்பம் போன்ற நிறுவனங்களின் எதிர்ப்புக்களைக் கடந்து இருட்டிலிருந்து வெளிச்சத்தை நோக்கி தலித் மக்கள் போராடுவதை ஆசிரியர் உளம் கொள்ளும் வகையில் எடுத்துரைக்கிறார். நகர்தல் அற்ற ஒரு சமூகத்தை இலக்கியம் நகர்த்தப் போராடுவதைக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

பேராசிரியர் பெ.சுயம்பு, சங்க இலக்கியங்களில் வேட்டைத் தொழில் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. பேராசிரியர் சொல்விளக்கம் என்னும் தலைப்பில் வேட்டம், வேட்டை, வேட்டு என்னும் சொற்களின் வேர்ச்சொல் "வேள்" என்பதைச் சுட்டி, "வாழ்வியலைச் சிதைவுறாது நிலைப்படுத்திட மேற்கொள்கிற அவா" என்னும் விளக்கம் கற்போருக்கு இன்பம் அளிப்பதாகும். கட்டுரை முழுவதும் ஆழ்ந்த வாசிப்பிற் குரியதாகும்.

தர்மம், அறம் - பொருண்மை, வழக்கு

பேராசிரியர் **தி.முருகரத்தனம்**

1. அறம் - பொருண்மை:

தர்மம் என்னும் ஆட்சிக்குப் பல பொருண்மைகள், கடமை, நீதிமுறை, சட்டம், அறம், சமயப் பயன், மெய்மை, கருதுகோள் என வழங்கப்படுகின்றன. வடபுலத்தின் நீண்ட கால வரலாறும், பல சமயக் கருத்து மரபுகளும் இப்பன்மைப் பொருண்மைகளுக்குக் காரணமாகலாம். தெளிவு தேடிச் செல்ல வேண்டியுள்ளது.

ஆனால் அறம் என்னும் தமிழ்ச் சொல்லாட்சிக்குப் பல பொருண்மை இருப்பதாகத் தோன்றவில்லை. பழந்தமிழ்த் தொகைப்பனுவல்களும் இடைக்கால முற்பகுதியுமே இவ்வறத்தின் வரலாற்றுப்புலம். தமிழின் அகம் புறம்தான் அதன் வேர். ஆயிரமாண்டு நீண்ட காலத்திலும் அதன் பொருண்மை 'செம்மை சால் மேல் நெறி'; 'மன்பதை - மக்கள் வாழ்க்கை உரியது'; 'Social ethics; morality'.

இந்தியக் கருத்தாக்கப் பின்புலத்தில் (ideological tradition) தர்மம் என்னும் கருதுகோள் பரவலாகப் பேசப்படுகிறது. திரிவர்க்கப் புருடார்த்தம் என்னும் கட்டமைப்புக்குள் ஒன்றான தர்மம் பற்றி அக்கட்டமைப்புக்கு அப்பாலும் அத்தர்மம் பரவலாகப் பேசப்பட்டது. அதற்கு, முன்னர் நீண்டகாலக் கருத்தாக்கப் பின்புலமும் சமய வரலாற்றுப் பின்புலமும் காரணமாகலாம். ***பர்த்ருஹரியின் திரிசதகம்,*** பிற ***அமருசதகம்...*** தர்மம் பேசித் தொடர்ந்தன.

அறக்கருத்துக்கள், தமிழகத்தில் ஆங்காங்கே ஆக்கம் பெற்று வழங்கின. பதினெண்கீழ்க்கணக்கு நூல்வரிசையில் சமண பவுத்த வைதீக சமயத்தார் அறநூல்கள் படைத்துள்ளனர். இவை பதினெட்டில் பதினொன்று. **திருமூலர்** தம் **திருமந்திரத்துள்**

வள்ளுவரைப் பின்பற்றி அறம் சிறிது பேசுகிறார். பின்னர் **அவ்வையார்** வழிச் சில அறம் பேசும் நீதிநூல்கள் எழுந்தன. பிற்காலக் குமரகுரு வரை இவ்வாறு அறநூல்கள் எழுந்தன. இருபதாம் நூற்றாண்டிலும் 'ஆத்திசூடிகள்' எழுந்தன. ஆனால் எவையும் வள்ளுவர் முப்பாலுக்கு ஈடு இணை பெறவில்லை.

௨. தர்மம் – நோக்கம்:

தர்மம் என்பதன் ஆக்கமும் நோக்கும் போக்கும்தாம் என்ன? கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்கின்றனர் ஆய்வாளர் சிலர். 'தர்மம் மக்கள் வாழ்க்கையின் ஒருபக்கத்தின் (side) நடைமுறைகளைத் தன் நோக்கில் நெறிப்படுத்துகிறது. அதன் ஆக்கமும் உள்ளடக்கமும் அதற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன' என்பர் சிலர். 'தர்மம் வாழ்க்கையின் உயர் குறிக்கோளை விளக்கிப் பின் அடைய வேண்டிய இறுதிக் குறிக்கோள் மதிப்பியத்தை (End value)யும் காட்டுகிறது' என்பர் வேறுசிலர். அவர்களுக்கு இறுதி மதிப்பியம் மோட்சம் போலும். மற்றும் சிலர், 'தர்மம் இறுதிக் குறிக்கோளான மோட்சத்திற்கு வழித்துணை (means) ஆகும்' என்கின்றனர்.

3. தர்மமும் ஆசிரமங்களும்:

மோட்சத்திற்குத் துணையாகும் தர்மத்தின் கருத்துக்களில் ஒருபகுதி ஆசிரமங்களைப் பற்றிய கருத்துக்கள். ஆசிரமங்கள் பிரமச்சரியம், கிருஹஸ்த்தம், வானப்பிரஸ்த்தம், சந்நியாசம் என்னும் வாழ்வுநிலைகள். மோட்சம் அடைவதற்கு இவை வழி என்பர். ஆனால் தர்ம சாத்திரம் (மநு தர்மசாத்திரம்) மோட்சம் பற்றி விரித்துப் பேசுவது அரிதாக உள்ளது. (பேசவில்லை என்பர் ஆய்வறிஞர்.) ஆசிரமங்கள் பிராமணர்களின் கைத்தடி, ஊன்றுகோல். இவற்றை வெற்றுப்புனைந்துரைகள் என்பர் ஆய்வறிஞர் **Dumont**. மேலும் வெறும் பிராமணீய மேலாதிக்கக் கட்டளை (mere norm of Brahmanical books) என்பார் (**Murty**) மூர்த்தி.

4. தர்ம சாத்திரங்கள்: வருணாசிரம தர்மம்:

வைதிக சமயத்தின் தர்மசாத்திரங்கள் பேசும், வற்புறுத்தும், இறுக்கிப்பிடிக்கும் சமூகக் கட்டமைப்பாவது வருணாசிரம

தர்மம்தானே. உலகம் அதனை யாது என அறிந்துகொண்டது. சமூகத்தில் புனிதம், பாவம் (sacred, non-sacred), சமூக உயர்வு தாழ்வு (high-low social), (theocracy புரோகிதம்) பிறப்பு, தொழில் இணைப்பு (birth, profession link); தூய்மை, தீட்டு (purity, impurity in birth), குணமும் சாதியும் (character - caste) ஆகிய அடித்தளங்களின் மேல் கட்டமைக்கப்பட்டதே வருணாசிரம தர்மம். அது கடவுள் படைப்பு என்பர். இன்றை ஆய்வறிஞர்கள் இவை கற்பனை, புளுகு, புரட்டு, மேல் கீழைச் சுரண்டல் என விளக்குகின்றனர்.

5. வருணதருமம் - உரிமை பறித்தல் - சமூகம் - நிலை:

வைதிக சமயங்களுக்கு உரிய தர்மசாத்திர வருணாசிரம தர்மம் கிடுக்கிப் பிடியாகக் கொண்டுள்ள சமூகக் கட்டமைப்பில் யாருக்கும் தாம் எண்ணியபடி இயங்கும் வாய்ப்பு, உரிமை இல்லை; சமூகக் கட்டமைப்பினை மாற்றிப் பேசவும் உரிமை இல்லை; பிற சமூகத்தாரிடம் உறவாடும் சமன்நிலையும் இல்லை. புதுப்புது எண்ணங்களும், முயற்சிகளும் ஆக்கங்களும் வருணாசிரம தர்மக் கட்டமைப்பில் தோன்ற வாய்ப்பே இல்லை. *சமூகம் என்றும் ஒரே நிலையில், மாறாக்* கட்டமைப்பில் நடக்கவேண்டி இருந்தது. சமூகம் தேங்கியது; பின்தங்கியது என்பர். வரலாற்று, சமூக ஆய்வறிஞர்கள், 'இடைக்காலத்து, இன்றைக் காலத்து மேலைநாடுகள் கண்டது போன்று இந்தியநாடு புத்தொளி (Enlightment) பெறவில்லை; ஆதலால் இந்தியா முன்னேற்றம் இழந்து பின்னோட்டமே சென்றது என்கின்றனர்.

இன்றைப் பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் மேலைநாட்டு வெள்ளையர்கள் இந்தியாவிற்குக் கற்றுத் தந்தது, கற்கத் தந்தது, கொள்ளத் தந்தது. இந்தியச் சமூகப் பண்பாட்டை மாற்றத் தந்தது, அனைத்து மக்கட்கும் சமவாய்ப்பளிக்கும் மக்களாட்சிமுறை democracy ஆகும். இவ்ஆட்சி முறையில்தான் உரிமை (liberty), சமன்மை (equality), தோழமை (fraternity) ஆகிய மதிப்பியங்களை (social values) வருணாசிரமக் கட்டமைப்பில் சிறைப்பட்ட இந்திய - இந்துத்துவச் சமூகம் - கண்டு கொண்டது. இந்தியா ஒளிபெறுகிறது.

6. வள்ளுவரது அறத்தின் நோக்கம்:

வள்ளுவரின் முப்பால் பேசுவது தான் என்ன? எத்தகையவை? எவை? அர்த்த சாத்திரம் வாழ்வின் பல கூறுகளை இணைத்துப் பேசுவது போன்று முப்பாலும் பொருளையும் இன்பத்தையும் தனித்தனியே பேசிவிட்டு வாழ்வின் பிறகூறுகளை, பிறப்பு முதல் இறப்பு வரை, இல்லறம் முதல் நிலையாமை வரை அறத்துப்பாலில் பேசுகிறது; இவற்றுள் வாழ்வின் கூறுகள் முழுமையாகப் பேசப்படுகின்றன.

இவ்வாழ்வின் கூறுகளுக்கான அறநெறிகளை முப்பால் வழங்குகின்றது. அம்முப்பால் வேண்டும் சமூகம் இனிமையும் அமைதியும் சீர்மையும் வளமும் கொண்டு திகழ வேண்டும் என்பது அதன் கருதுகோள் போலும். தர்மசாத்திரங்களுக்கும், வள்ளுவரது முப்பாலுக்கும் இடையே வாழ்வின் கூறு வழங்கலில் ஒற்றுமை உண்டு. ஆனால் தர்ம சாத்திரம் போன்று சட்டமும், நீதியும், கடமையும், சமயமும் முப்பால் பேசவில்லை. இவற்றை வள்ளுவர், காலத்திற்கு ஒவ்வாத, ஒருசார்புடைய சமூகக் கட்டமைப்புக்கு உரியவையாகக் கருதிப் புறக்கணித்திருக்கலாம். வள்ளுவருடைய நோக்கும் தருமசாத்திரத்திலிருந்து வேறானது என்பது தெளிவாகின்றது.

வள்ளுவர் வாழ்வியல் மதிப்பியங்கள் (values) இறுதி மதிப்பியங்கள் பற்றிப் பேசுகிறாரா? ஒருகால் அவருக்கு அவர் வழங்கும் ஒரோர் அறமும் ஒருமதிப்பியமாக இருக்கலாம். அன்புடைமை, அருளுடைமை, கொல்லாமை.... ஒவ்வொன்றும் ஒருமதிப்பியமாகலாம். ஆனால் 'ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்' என்பதன் 'பேரா இயற்கை' இறுதி மதிப்பியமாக (end value) இருக்கலாம். இத்தொடர் வாழ்விலிருந்து விடுதலை - மோட்சம் - பெறுதலையே பேசுகிறது. மோட்சத்திற்கு வழங்கப்படும் பொருண்மைகள் பலவற்றுள் இதனையும் ஒன்றாகக் கொள்ளலாம்.

வள்ளுவர்க்கு வேறு இறுதி மதிப்பியமும் இருக்கலாம். அது புகழ் எனலாம்.

சாதலின் இன்னாதது இல்லை; இனிது அதூஉம்,
ஈதல் இயையாக் கடை (ஈகை)
ஈதல் இசைபட வாழ்தல், அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (புகழ்)
ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல் (புகழ்)
தோன்றின் புகழொடு தோன்றுக; அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (புகழ்)
புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே,
ஒப்புரவின் நல்ல பிற. (ஒப்புரவறிதல்)

இந்தக் குறட்பாக்கள் இசையை, புகழை இறுதிவிழுமியமாக (end value) உயர்த்திப் பிடிக்கின்றன. இவ்இறுதி விழுமியத்திற்குத் துணையாக, வழியாக (means) ஒப்புரவு, ஈகை அமைக்கப் பட்டுள்ளன. சாக்காட்டின் மேலும் ஈயாமை துன்பமானதாம். அதாவது ஈகை உயர்த்தப்படுகிறது. புகழ் இல்லையேல் பிறப்பே வேண்டாம் என்கிறது ஒருகுறட்பா. வள்ளுவர் மேலுலகத்தை, வானோர் உலகத்தை, புத்தேளுலகத்தைச் சுட்டிப் பேசுகிறார். ஆயினும் அவை இறுதி விழுமியம் அல்ல; அவருக்கு அவ்வுலகத்தைக் கடந்தது இவ்உலகில் இரப்போர்க்கு ஈதல்; வறுமை களைந்து வளம் சேர்க்கவே ஈதல் ஆகும்.

புகழ்தான் என்ன? எங்ஙனம்? வள்ளுவர் செந்தமிழர்; அறவேந்தர். அவருக்கு முன்னோர், முன்வோர் பழந்தமிழர், அகம் புறம் பாடிய ஆன்றோர். பழந்தமிழரிடையே காதல், மறம், ஈகை (வள்ளன்மை) இவற்றால் ஈண்டு ஈட்டப்படும் புகழ் ஆகியவையே விழுமியங்கள்; தமிழர் கண்ட விழுமியங்கள். இந்தப் புகழ் நடுகல்லில் இடம்பெறும்; நிலை பெறும். (வானுலகம் என்னும் விடுதலை உலகக் கருத்தாக்கம் - வீடு - தமிழகத்தில் வந்திறங்கியது. ஆய்வு கண்டது.) வள்ளுவர் பழந்தமிழரின் ஈற்று விழுமியத்தை ஏற்றுக் கொணர்ந்தார். காதல், ஈகையை அதற்குத் துணை (means) யாகவே கொண்டார். மறத்தை - மறத்தால் ஈட்டும் புகழை - *சிறிது மறுத்தார்;* ஒதுக்கினார், அவர்.

தர்மசாத்திரங்கள் பேசும் வருணாசிரம தர்மத்தை **வள்ளுவர்** ஒருசிறிதும் உடன்படவில்லை. பவுத்தர் சமணர் போன்று வைதீக சமயத்து வருணாசிரம தருமத்தை வள்ளுவரும் உதறி எறிந்தார்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று (புலால் மறுத்தல்)

என்னும் குறள் வேதவழிச் சமயத்துக்கு எதிர் ஆகும் அல்லவா?

வைதிக சமயம் சார்ந்த தர்மசாத்திரமும், வள்ளுவர் முப்பாலும் நோக்கிலும், போக்கிலும், ஆக்கத்திலும் முற்றிலும் வேறுபட்டவை; இவற்றிடையே உறவு காணலும் வேர் காணலும் இயலா. **பரிமேலழகர்** தம் முப்பாலுரையில் வைதிக வருணாசிரம தருமத்தையே காணுகிறார்; காட்டுகிறார். அவர் உரை வள்ளுவர்க்கு இட்ட திரை, என்பார் பாரதிதாசனார்.

இந்துமதம் பற்றித் தாகூர்:

டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் காணப்படும் ஒரு பகுதி:

"இந்து மதம் இந்தியாவின் தலைவிதியானது; நீக்க முடியாத ஒரு தலைவிதியாகும். அதன் கதி இந்தப்படி தவிர, வேறுவிதமாக இருக்க முடியாது. ஏனென்றால், நாம் நமக்குள் ஜாதி ஜாதியாகப் பிரிந்துவிட்டோம். அந்தந்த ஜாதிக்குள்ளும் வகுப்பு வகுப்பாகவும் பிரிந்து விட்டோம். இவ்வண்ணம் நாம் துண்டு துண்டுகளாகப் பிரிந்து போய்விட்டோம். இதனால் நாம் ஒத்து ஒருவரிடத்தில் மனிதத் தன்மையாக இருக்க முடியாமல் போய்விட்டதனால் நாம் அழிந்து ஒழிந்து போவதற்குத் தகுதியுடையவர்களாக ஆனோமே தவிர, நாம் இனி உலகத்தில் உயிருடன் இருக்கத் தகுதியுடைய வர்களாக இல்லை. இப்படி நாம் பிரிந்து விட்டதாலேயே நாம் எக்காலத்திலும் நம்நாட்டைப் பிறருக்கு வசப்பட்டுப் போகும்படிக் கொடுத்துக் கொண்டே வருகிறோம். நாம் நம் ஜாதிப்பிரிவுகளால் தற்கொலை செய்து கொண்டவர்களாக ஆகி விட்டோம். நாம் ஜாதிகளை ஒழித்து அதனால் நாம் முன்னுக்கு வர வழிகோலவே இல்லை. நம் சாஸ்திரங்கள், ஜாதிப்பிரிவுகளை மீறக்கூடாதென்றும், மீறினால் இவ்வளவு பாவம் இவ்வளவு தண்டனையென்றும் உரைத்து நம்மை அடக்கிவிட்டன.

நம் ஜாதிகளையும், அவற்றை வலியுறுத்தி நிலை நிறுத்தும் சாஸ்திரங்களையும் பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள் என்ற காரணத்தினால் அவை ஆதிகாலம் தொட்டு நடைமுறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதனால் அவற்றை நாம் தற்சமயம் இடையில் கலைக்கப்படாது என்ற மூடக்கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டிருப்பதனால், நாம் மனிதத்தன்மை இழந்து உலகிலுள்ள பெரிய ஜனசமூகங்களுக்கு இடையில் தாழ்ந்துவிட்டோம்."

விடுதலை நாளிதழ் 27.03.2015

தலித் இலக்கியமும் இலக்கிய இயக்கங்களும்

முனைவர் உ.கருப்பத்தேவன்,
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

அனைத்திந்திய மொழி இலக்கியங்களிலும் இன்று தலித் இலக்கியம் ஒரு தவிர்க்க இயலாத அங்கமாகிவிட்டது. மராத்தி மொழியில் தோன்றிய இந்தப் புதிய இலக்கிய வகை உலக இலக்கியத்திலேயே மிகவும் நவீனமான படைப்பாகும். தமிழில் தலித் இலக்கியம் தொடக்க நிலையிலேயே உள்ளது. 'தலித்' என்றசொல் 1980-இல் தமிழுக்கு முதன்முதலில் அறிமுகமானது. இன்று தலித் அரசியல் இயக்கம் தமிழகத்தில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இது தமிழ் தலித் இலக்கியம் என்னும் இலக்கிய இயக்கமாகவே மலர்ந்துள்ளது. இலக்கியம், அடிப்படையில் அதிகாரத்திற்குப் புறம்பானதே. தலித் இலக்கியம், அதிகாரத்திற்கு எதிரான ஆழமான மறுதலிப்பு மற்றும் எதிர்ப்புணர்வை (Negation) எப்பொழுதும் பிரகடனப் படுத்திக் கொண்டே இருப்பதாகும். காரல்மார்க்சின் "மாற்றம் என்ற ஒன்று மட்டுமே என்றுமே மாறாத ஒரே விதி" என்னும் கூற்று என்பது தலித் இலக்கியத்தின் முக்கியப் போக்காகும். தலித் படைப்பிலக்கியங்கள் எந்த அளவுக்கு மறுதலிப்பை ஆதரிக்கின்றதோ அந்த அளவுக்கு மறதிக்குட்பட்ட அதுவரை வெளிப்படாத மரபுகளை வெளிக்கொண்டு வருகின்றது. இடைவிடாத ஒரு நீண்ட தொடர்ச்சியைக் கொண்டிருப்பதே உயர்ந்த படைப்புத் தத்துவமாகும் (தமிழவன், தொகு.ஆ., கன்னட தலித் இலக்கியம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 2002, ப.18).

இந்திய நாட்டின் தலித் இலக்கியம், ஆப்பிரிக்க நாட்டின் நீக்ரோ இலக்கியத்துடன் தொடர்புபடுத்தி நோக்கப்படுகின்றது.

ஆப்பிரிக்க நாட்டின் நீக்ரோக்களை ஐரோப்பிய வெள்ளையர்கள் கொத்தடிமைகளாக நடத்தியுள்ளனர். அதைப்போன்றே இந்து தரும நெறியாளர்களும் (மனுதர்ம நெறி) தமது சொந்த மண்ணின் மரபுகளையும் வாழ்க்கை முறைகளையும் தரும நெறிகளையும் பின்பற்றும் தலித் இன மக்களை ஆடுமாடுகளை விடக் கேவலமாக நடத்தி வந்துள்ளனர். இது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தலித் இலக்கியம் இன்பமான வாசிப்புக்கு உரியதல்ல. படிப்பவர்கள் சூடாகும்படியும் முகம் சுளிக்கும்படியும் அது இருத்தல் வேண்டும் (இராஜ் கௌதமன், தமிழக தலித்தும் தலித் இலக்கியமும், அய்டியாஸ், 1992, ப. 17). தலித் இலக்கியத்தில் தலித்துக்களின் மோசமான அவல உணர்வுகள் வெடித்துச் சிதறலுக்கு ஏற்றாற் போன்று கோபதாபங்கள் மலிந்த, மேல்பூச்சுப் பெறாத மொழி பின்பற்றப்பட வேண்டும் (அர்ச்சுன் டாங்களே, 1992, பக். 252, 260). ஒரு புல்லாங் குழலின் வழியாகக் காற்று நளினமாக வெளியேறுவதற்கும், ஒரு பலூன் வெடித்துச் சிதறும்போது அதிர்வுகளுடன் காற்று வெளியேறுவதற்கும் வேறுபாடுகள் உண்டு.

'தலித்' – சொல்லும் பொருளும்

'தலித் என்றசொல்லாட்சி தற்பொழுது மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சொல் நாடு முழுவதும் இன்று தவறான பொருளிலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவின் முக்கியப் பிரச்சினை ஜாதிகளுக்குப் பெயர் வைக்கப்பட்டதே. இந்த அடிப்படையில் 'தலித்' இனமக்களுக்குப் பெயர் சூட்டப்படுவதில் மகாத்மா காந்தியடிகள் கொடுத்த புதுப்பெயரான **'ஹரிஜன்'** (ஹரியின் புதல்வர்கள்) என்பதும் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது. தீண்டத் தகாதவர்கள் என்று சொல்லி ஒதுக்கப்படுபவர்களை இன்று ஹரிஜன் என்றழைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று சொல்வதைப் பார்க்க முடிகின்றது.

சட்டமேதை பி.ஆர். அம்பேத்கர் தம் எழுத்துக்கள் முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களைக் குறிப்பிடுவதற்குத் 'தலித்' என்ற சொல்லாட்சியையே பயன்படுத்தியுள்ளார். தலித் என்பவர்கள் தீண்டத்தகாதவர்களும், தீண்டாமைக்கு ஆட்படா விட்டாலும் மிகுந்த துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆட்பட்டுச் சிதறிப் போயிருக்கும் சிறுபான்மையினரின் பிரதி நிதிகளுமே ஆவர். தலைமுறை தலைமுறையாகப் பொருளாதார ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் கல்வி மற்றும் அரசியல் ரீதியாகவும் ஒடுக்கப்பட்டவர்கள் மட்டுமே தலித்துக்கள் ஆவர். இவர்கள் தங்கள் வாழ்வியல் துன்பங்களையும் துயரங்களையும் படைக்கும் கலைகளில் மொழியின் வாயிலாகப் படைக்கும் இலக்கியங்களே தலித் இலக்கியங் களாகும்.

இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் தலித் இலக்கியத்திற்குச் சிந்தனை ஊற்றாகத் தலித் இலக்கியவாதி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் உள்ளார். தலித் இலக்கியப் படைப் பாளிகள் அம்பேத்கரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள் ளதைப் போன்றே, தலித் படைப்பாளிகள் கௌதம புத்தரின் சிந்தனைகளையும் ஆழ்ந்து நேசித்து ஏற்றுக்கொள்கின்றனர். தலித்துக்கள் குறிப்பிட்ட ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல. இந்திய நாட்டின் சமுதாய வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கக் கட்டுப்பாடுகளின் காரணமாகச் சமுதாய மற்றும் பொருளியல் நிலைகளில் சுரண்டப்படுபவர்களும் தலித் இனத்தவர்களே. சாதாரண அகராதிகள் 'தலித்' என்பதற்குத் 'துன்பத்திற்கு ஆளான', 'தோற்கடிக்கப்பட்ட' என்னும் பொருள்களைத் தருகின்றன. 'தலித்' என்பதற்குத் 'தீண்டத்தகாதவர்கள்' என்ற பொருளும் தரப்படுகின்றது. இவர்களே இந்தியாவின் பழங்குடி மக்கள் ஆவர். ஆதலால் பொருளாதார ரீதியாகவும், அரசியல், கல்வி மற்றும் சமுதாய ரீதியாகவும் யார் யார் புறக்கணிக்கப்பட்டார்களோ அவர்கள் அனைவரையுமே தலித்துக்கள் எனலாம் (தேவய்யா ஹரவே,

தமிழில் சிவசண்முகம், தமிழவன், (தொ.ஆ.), கன்னட தலித் இலக்கியம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 2002, ப. 216).

தலித் இலக்கியத்தின் தொழிற்படு தளங்கள்

மார்க்சியம், பெரியாரியம் ஆகியனவற்றில் வேர் பிடித்து பார்ப்பனிய எதிர்ப்புச் சக்தியுடன் இணைந்த போராட்டக் காலமே தலித் இலக்கியமாகும். தமிழில் தலித் இலக்கியம் குறித்துப் பேசியும் எழுதியும் வருபவர்களில் ராஜ் கௌதமன், அ. மார்க்ஸ், இரவிக்குமார், கே.ஏ. குணசேகரன், பிரபஞ்சன், ப. சிவகாமி, தி.க.சி., வல்லிக்கண்ணன், பொன்னீலன், அருணன், கோ. கேசவன் ஆகியோர் முக்கியமானவர்கள். தலித் இலக்கியத்திற்கு விரிந்த உலகப்பார்வை இல்லை எனப் பேசுபவர்களில் ஞானியும் சுந்தரராமசாமியும் முக்கிய மானவர்கள். தலித் சாதியில் பிறக்காமலேயே தங்களைத் தலித்துக்களாக உணர்ந்து பழமலை, இன்குலாப், பா. செயப்பிரகாசம், மாற்கு, அ. மார்க்ஸ் போன்றோர் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

தலித் இதழ்கள்

கோடாங்கி, நிறப்பிரிகை, படி, மனுசங்க, கவிதாசரன் ஆகியன தலித் இலக்கிய இதழ்கள் ஆகும். விளிம்பு, விடியல் ஆகியன தலித் இலக்கியத் தனிப்பதிப்புக்கள் ஆகும். ராஜ்கௌதமன், இரவிக்குமார், பாமா, ப. சிவகாமி, கே.ஏ. குணசேகரன், பிரதிபா ஜெயச்சந்திரன் ஆகியோர் தலித் இலக்கியவாதிகள் ஆவர். அன்னம், க்ரியா, தமிழ்ப்புத்தகாலயம் ஆகிய பதிப்பகங்கள் தலித் இலக்கியங்களை வெளியிட்டன. தினமணிக்கதிர், இந்தியா டுடே ஆகிய இதழ்கள் தலித் சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளன.

தலித் இலக்கியப் படைப்புக்கள்

டானில் 'பஞ்சமர்' என்ற நாவலையும், பாமா 'கருக்கு' என்ற தமிழ் தலித் இலக்கியத்தின் வரலாற்று நாவலையும், 'சங்கதி' என்னும் தலித் நாவலையும் படைத்துள்ளார். இமயம்

என்பவர் இருட்டின் மனிதர்கள், கோவேரிக் கழுதைகள் ஆகிய தலித்திய நாவல்களைப் படைத்துள்ளார். ப.சிவகாமி ஆனந்தாயி, பழையன கழிதலும் என்னும் இரு தலித் நாவல்களை எழுதியுள்ளார். பூமணியின் 'பிறகு' கு.சின்னப்பபாரதியின் தாகம், சங்கமம் ஆகிய நாவல்களும், விழி, பா.இதயவேந்தனின் 'நந்தனார் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பும், க.சுப்பையாவின் யுத்தம் தொடரும் என்னும் கவிதைத் தொகுதியும், அபிமானியின் நோக்காடு என்ற சிறுகதைத் தொகுதியும், இந்திரனின் 'அறைக்குள வந்த ஆப்பிரிக்க வானம்' என்ற தொகுப்பும், ராஜ முருகு பாண்டியனின் தலித் கவிதைகளும், கே.ஏ. குணசேகரனின் பலி ஆடுகள் என்ற நாடகமும், ராஜ்கௌதமனின் தலித் பண்பாடு, தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு ஆகிய திறனாய்வுக் கட்டுரைகளும், இரவிக்குமாரின் புனைவுகள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புக்கள், நாடகம், இசைப்பாடல்களும், கோ. கேசவனின் 'தலித் இலக்கியம் சில கட்டுரைகள்' என்ற நூலும் சிறந்த தலித் இலக்கியப் படைப்புக்கள் ஆகும். பூமணி, ப. சிவகாமி, க. சமுத்திரம், பொன்னுசாமி, முகில் ஆகியோர் தலித் இலக்கியத்தில் புதுத்தடங்களைப் பதித்தனர். இதயம், பாமா ஆகியோர் பிரச்சினைகளின் புதிய கூறுகளை வெளிப்படுத்தினர்.

புதுக்கவிதைப் படைப்புக்களிலும் தீண்டாமைப் பிரச்சினை வலுவாக முன்வைக்கப்படுகின்றது. 'ஒரு டீயின் விலை ஒன்பது உயிர்கள்' என முடியும் கந்தர்வனின் புதுக் கவிதையில் தீண்டாமை எதிர்ப்புணர்வு பதிவு செய்யப் பெற்றுள்ளது. வெண்மணிக் கொடூரத்தை நவகவி எழுதிய நீள்கவிதை விளக்குகின்றது.

தலித் இலக்கியத் திறனாய்வுகள்

1) சு. சண்முகசுந்தரம் (தொகுப்பு) – தலித்தியம்
2) அருணன் – தலித் : அரசியலும் இலக்கியமும்
3) கே.ஏ. குணசேகரன் – தலித் கலை, கலாச்சாரம்

ஆகிய மூன்று நூல்களும் தலித் இலக்கியத் திறனாய்வு நூல்களாகும். தமிழ்நாட்டில் தலித் இலக்கியப் படைப்புக்களும் திறனாய்வுகளும் பெரியாரியத்தின் தாக்கமும், மார்க்சியக் கோட்பாடுகளும், அம்பேத்காரின் புரட்சிகரமான சிந்தனைகளும், தாழ்த்தப்பட்ட மக்கள் அமைத்த சங்கங்களின் செயல்பாடுகளும் தலித் எழுச்சிக்கு ஒரு வளமான தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளன. இதனால் தலித் இலக்கியம் தனித்த இலக்கியப் போக்குடையதாக வளர்ந்து வருகின்றது. 'சாதியம்' என்பதே தீண்டாமையுடன் இணைக்கப்பட்டதேயாகும். தலித் இலக்கியம் எவ்வித உடன்பாடும் இல்லாமல் சாதியொழிப்பை முன்னிலைப்படுத்துகின்றது. 'நம் கடவுள் சாதியைக் காப்பாற்றும் கடவுள்; நம் மதம் சாதியைக் காப்பாற்றும் மதம்; நம் இலக்கியம் சாதியைக் காப்பாற்றும் இலக்கியம்; நம் மொழி சாதியைக் காப்பாற்றும் மொழி' என்றார் பெரியார்.

சங்க இலக்கியங்களில்,

"துடியன் கையது வேலே....
பாணன் கையது தோலே...." (புறம். 285)

"........................அறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன்குரலே" (புறம். 289)

"துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை" (புறம். 335)

எனத் தலித்துக்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியங்களில்,

"குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து எத்தனை
நலம்தான் இலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
வலம்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு
ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார்தம் அடியார்எம் அடிகளே"
(நம்மாழ்வார், திருவாய்மொழி, 3:7:9)

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறே"

(திருநாவுக்கரசர் தேவாரம், 5:66:3)

எனத் தலித் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தலித்தின் குரலைத் தொடக்கத்தில் ஓங்கி ஒலித்தவர் சைவ வேளாளரான சேக்கிழாரே. தீண்டாமையின் கோர வடிவத்திற்கு எடுத்துக் காட்டு அவர் படைத்த திருநாளைப்போவார் புராணமாகும்.

"இப்பிறவி போய் நீங்க எரியினிடை மூழ்கி"

-(திருநாளைப் போவார் புராணம் 28)

சித்தர்களே தமிழில் தலித் இலக்கிய முன்னோடிகள் ஆவர். வேதியர் குலத்தில் பிறந்து குறப்பெண்ணை மணந்தார் சிவவாக்கியர் எனச் சுட்டுகின்றது அபிதான சிந்தாமணி. அவர்தான் எச்சில், தீட்டு என்பதை எதிர்த்தவர். 'நாதமேது வேதமேது நாற்குலங்கள் ஏதடா' என்பது சிவவாக்கியர் பாடலாகும்.

பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலான சிற்றிலக்கியங்கள் தலித் மக்களின் வாழ்க்கையை இலக்கியமாக வடித்துள்ளன. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற் பள்ளு முதலில் தோன்றிய தமிழின் தலித் இலக்கியமாகும். அந்த அளவுக்கு அது தீண்டாமையை எதிர்க்கின்றது. பள்ளர் சாதியைச் சேர்ந்த ஒருவரே,

"பக்கமே தூரப் போயும்
தக்க சோறென் வேளாண்மை
பள்ளா பள்ளா எனபார் மெய்கொள்ளாதார்"

எனப் பாடுவது நோக்கத்தக்கதாகும். அவர் தங்களைத் தூரப்போ என்று விரட்டும் மேல்சாதிக்காரர்கள் தாங்கள் வேளாண்மை செய்து தரும் சோற்றைமட்டும் விலக்குவதில்லை எனச் சிண்டல்

செய்கின்றார். குறவஞ்சி இலக்கியங்களில் குறவன், குறத்தியை வருணிக்கும் பாங்கும் சாதியத்தை உறுதிப்படுத்துகின்றது. நொண்டி நாடகத்தில் வரும் நொண்டி ஒடுக்கப்பட்ட சமூகத்தவனாகவே காட்டப்படுகின்றான். 19-ஆம் நூற்றாண்டு கோபாலகிருஷ்ண பாரதியாரின் – 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' சாதியத்தை மென்மையாகச் சாடுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் செய்யமுடியாது; அக்கினிப் பிரவேசம்தான் செய்யமுடியும் என்றார் சேக்கிழார். இதற்கு மாறாகத் தலித் இன மக்களுக்கும் ஆலயக் கதவுகளைத் திறந்துவிட வேண்டிய வேளை வந்துவிட்டது என எச்சரிக்கின்றது கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

தமிழில் தலித் இலக்கியத்தின் பிதாமகனாகிய பாரதி,

"சூத்திரனுக்கொரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் – அது
சாத்திரம் அன்று சதி"

எனப் பாடினார். புலையரின் விடுதலையை முதன்முதலில் அரசியல், பொருளாதார விடுதலையோடும் இணைத்தவர் பாரதியே.

"பறையருக்கும் இங்குதீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை
திறமை கொண்ட தீமையற்றதொழில்புரிந்து
யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி வாழ்வம் இந்த நாட்டிலே"

என்று பாடினார் அவர்.

நாட்டுப்புறப் பாடல்களான வாய்மொழி இலக்கியங்களே உண்மையான தலித் இலக்கியங்களாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் வாய்மொழி இலக்கியங்களாகப்

பெரிதும் அறியப்பட்ட பறைஆட்டக்கலை நிகழ்ச்சி, ராஜாராணி ஆட்டம், நையாண்டி மேளம், குறவன்-குறத்தி ஆட்டம், கருப்பாயி கூத்து, தப்பாட்டம், பறையடித்தல் ஆகியன தாழ்த்தப்பட்ட மக்களாலேயே நிகழ்த்தப்பட்டு வரும் கலைகளாகும் (கே.ஏ. குணசேகரன், தலித் கலை, கலாச்சாரம், ராகாஸ், சென்னை, 1999, பக். 30-34).

தலித் இலக்கியக் கோட்பாடுகள்

கலகம், எதிர்ப்புணர்வு, அரசியல் எதிர்வினை ஆகியன வற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்ட தலித் இலக்கியத்திற்கு நாட்டுப்புறக் கலை மரபுகளை உள்வாங்கிக் கொண்டு வளர்வது முக்கியத் தேவையாகின்றது. நாட்டுப்புறக் கலை மரபுகளில் காணப்படும் தலித் மக்களின் இன்பம், வேதனையோடு கூடிய நக்கல்களும் கிண்டல்களும் கேலியும் பாலியல் அனுபவமும் ஆவேசமான பகுத்தறிவுக்கு மீறிய சக்திகளும், தொன்மம் சார்ந்த சூரத்தனங்களும், கட்டுக்கு அடங்காத உளவியல் சக்திகளும் தலித் இயக்கத்திற்கு உந்து சக்திகளாகும்.

தலித் இலக்கிய இயக்கத்தின் தனித்தன்மைகள்

- சாதியை எதிர்ப்பது
- தலித் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளைப் பேசுவது
- கடுமையான அரசியல் எதிர்விளைவுகளை உருவாக்குவது
- பொருளாதாரச் சமத்துவம் பேசுவது; வலியுறுத்துவது
- ஒவ்வொரு தலித் மனிதனுக்கும் தலித் என்ற இனவுணர்வைத் தூண்டி, தலித் அடையாளத்தைக் காணச் செய்வது
- தலித் விடுதலைப் போராட்டத்தின் ஆயுதமாகச் செயல்படுவது

- எதிர்மறையான சொல்லாடல்களைப் பற்றி நிற்பது
- புதிய தொன்மங்களை உருவாக்கி வடிவமைப்பது
- மரபுகளை உடைப்பது
- தலித் மொழியால் எழுத்துவடிவ முறையை மாற்றுவது
- இலக்கியத்திற்கென வரையறுக்கப்பட்ட அனைத்து விதமான கட்டுப்பாடுகளையும் மீறுவது
- நாட்டுப்புறக் கலைகளின் நீட்சியாகவும் தொடர்ச்சியாகவும் விளங்குவது

இன்று ஒடுக்கப்பட்ட மக்கள் இனத்திலிருந்து ஏராளமான தலித் படைப்பாளிகள் தங்கள் அடையாளங்களையும் அனுபவங்களையும் சுமந்துகொண்டு புறப்பட்டுள்ளனர். தமிழ்ப் பண்பாட்டின் ஜனநாயகமாக்கலின் அடுத்தக்கட்ட வளர்ச்சியையே இது காட்டுகின்றது.

தமிழ் அழகியலும் தலித் அரசியலும்

'ஈஸ்தெடிக்ஸ்' (Aesthetics) என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு 'அழகியல்' என்று தமிழில் பொருள்படுத்தி அது வாழ்வியல் தத்துவத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்படுகின்றது. தமிழ் இலக்கியவாதிகளுக்கு அழகியல் என்பது ஒரு புனிதமான விசயமாகும். தமிழ் அழகியல் உயர்சாதி மனப்பான்மை கொண்ட தமிழ்ப் பண்பாட்டையே வெளிப்படுத்துகின்றது. இந்த அழகியல், கவிஞன் வாழும் சமுதாயச் சூழலுக்கேற்றவாறுதான் அமையும். மரபு வழியில் இதுவரையில் கற்பிக்கப்பட்ட தமிழ் அழகியலுக்கு நேர்மாறானது தலித் அழகியலாகும். தலித் மக்களின் அழுக்கும் துர்நாற்றமும் கவிச்சியும் நாத்தமுமே தலித் அழகியல் ஆகும். இந்தியத் தலித் மக்களின் பிரச்சினை அவர்களின் சமூக ஒதுக்கல் ஆகும். பாரதிவசந்தன்,

"சேரிகளுக்கு கோவணம்கூட இல்லை
வெட்கம் கெட்டுப் பறக்கிறது

தேசியக் கொடி"

என்று பாடினார். இவ்வாறு தலித் கவிஞர்கள் பாடும்போது புனிதங்கள் அழிக்கப்படுகின்றன. மரபுகள் உடைக்கப் படுகின்றன.

"மாடி வீட்டு ஜன்னல்
சட்டை போட்டிருக்கு
அட சேரிக்குள்ளே சின்ன புள்ள
அம்மணமா யிருக்கு"

(வைரமுத்து, 'பாடும் வானம்பாடி' திரைப்படப்பாடல்)

வைரமுத்துவின் இப்பாடல் அங்கத நடையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சாடுகின்றது. வைரமுத்து 'இது எங்க நாடு' திரைப்படத்திற்கு,

"கோவணம் இல்லாத
தேசத்தில் இன்றைக்கு
எத்தனை கட்சிக் கொடி
கண்ணைப் பறிக்கிறதே
விண்ணை மறைக்கிறதே"

எனப் பாட்டெழுதியுள்ளார். தலித் இலக்கிய நோக்குடையவர், இலக்கியத்தின் கலைத்தன்மையைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. தலித் அழகியல் என்பது எதிர் அழகியலே ஆகும். தலித் மக்களின் இலக்கியம், தனக்குரிய அழகியலைத் தங்களின் வரலாறு சார்ந்த போராட்டங்களிலிருந்துதான் பெறுகின்றது. இவ்வழகியல் மாற்றம், கலகம், புரட்சி ஆகியனவற்றையே சார்ந்தது. தலித் கவிதைகள் கிராமியப் பின்புலத்திலேயே படைக்கப்படுகின்றன. படைப்பாளிகளின் கிராமம் சார்ந்த வாழ்க்கைச் சூழலும், கிராமங்களில் நிலவும் சாதியக் கொடுமையுமே இதற்குக் காரணமாகும். இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் கவிதைகளைக் குறிப்பிடலாம்.

1. "நிமிர்ந்துவிட்ட நிலப்பிரபுத்துவம்
வெண்மணியில் தீபாவளி கொண்டாடி

விழுப்புரத்தில் வாணவேடிக்கை பார்த்து
பெப்சியில் குளிர்காய்ந்தது போதாதென்று
பிப்ராவில் சாம்பல் மேடுகளைப் பரப்பி
உள்ளது" (குமரன்)

2. "புதர்மண்டி அடைந்து கிடந்த கணகளைப்
பறிக்க நின்றஎன் அம்மாவின்
அவசர இயற்கை அழைப்புக்கு
அடைக்கலம் தரும் பயிர்ச்செடிகளின
மகசூல்கள்
உனக்கு மகிழ்ச்சி அளிக்கும்
துர்நாற்றம் மண்டிய கழனித் தொட்டிக்குள்
என் அக்காளின் அழுக்கு வேர்வையைக குடித்த
உன பசுக்களின்
பால் ருசிக்கும்"

("கவிதாசரண்", ஜூலை-ஆகஸ்ட் 2003)

காலங்காலமாகச் சாதியின் பெயரால் இந்திய நாட்டில் அந்நியப்பட்டவர்கள், தங்கள் பண்பாட்டு அடையாளங்களை இழந்து தவித்த தலித்துஇன மக்களுக்கும் தங்களுடைய அடையாளங்களை வென்றெடுக்கும் உரிமை இருப்பதை உணர்ந்து, தங்களுக்கெதிரான அனைத்துவிதமான சமூகப் பண்பாட்டு அடக்குமுறைகளையும் எதிர்த்துக் கலகக் குரல்களைத் தலித் இலக்கியமாகப் பதிவு செய்கின்றார்கள். தலித் படைப்பாளிகள் தங்கள் எழுத்திற்கென்று தனித்ததொரு மொழிநடையும், கலை இலக்கிய வடிவங்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதுகாறும் வணங்கி வழிபட்டு வந்த புனிதங்களையும் மரபுகளையும் தங்கள் கவிதை என்னும் ஆயுதத்தால் தலித் படைப்பாளர்கள் உடைத்தெறிகின்றனர். இதனை அன்பாதவனின் 'இடியின் குரல்' என்னும் கவிதை கொண்டு அறியலாம்.

"நிறுவப்பட்ட எல்லாவற்றிற்கு மெதிராக
எழுகிறது எங்கள் எழுதுகோல்கள்
கடப்பாரைகளாய்,
எதிர்ப்பு இடிப்பு தகர்ப்பில்
புனிதங்கள் சிதைந்து சிதற
சிதிலங்களைச் சீரணிக்க முடியாதவர்களின்
முணுமுணுப்பு ஹீனமாய்த் தொடங்கி
எழுகிறது அகோரமாய்"

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் போராட்ட இயக்கமாகவும், முற்போக்குக் கூறுகள் கொண்டதாகவும், எதிர்காலத் தலித் இலக்கியப் படைப்புக்கள் அமைதல் நலம்.

நிறுவன எதிர்ப்புக் குரல்

நிறுவனங்களுக்கு (மரபுவழிப்பட்ட + அடிமையாக்கும் புதிய நிறுவனங்கள்) எதிரான கலக உணர்வுகளை வெளிப்படுத்துவதாகத் தலித் இலக்கியம் (Dalit Literature) அமைகின்றது (அர்ச்சுன டாங்கனே, தமிழில் கோ. கேசவன், தலித் இலக்கியம் சில கட்டுரைகள், புதுமைப் பதிப்பகம், மதுரை, 1998, பக். 10-11). ஆதிக்க அரசியல், சுரண்டல் பொருளாதாரம், தனியுடைமை, ஆணாதிக்கச் சமூகத்தின் விளைபொருட்களான சாதி, மதம், குடும்பம் போன்ற நிறுவன எதிர்ப்புக்களின் ஊடாக இன்றைய இருட்டிலிருந்து, தாழ்த்தப்பட்டோர் வெளிச்சத்தை நோக்கி நகரமுடியும் என்ற நம்பிக்கையைத் தலித் இலக்கியம் ஏற்படுத்துவது காலத்தின் தேவை. நிலவுடைமை எதிர்ப்பு, அடிமை முறை, சுரண்டல் எதிர்ப்பு, குடும்ப ஜனநாயகம் ஆகியன சமூகத்தில் ஒடுக்கப்பட்ட அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்தும்.

உழைப்பை மதித்தல்

தலித் இலக்கியம் உலகப் பொதுவுடைமை இலக்கியத்தோடும், இயக்கத்தோடும் தொடர்புடையதாகும். தலித்துக்களில் பெரும்பான்மையினர் கடுமையான உடலுழைப்பாளிகள் என்ற வகையில் தலித் இலக்கியம் – உழைப்பை மதித்துப் பெருமைப்படுத்துகின்றது. தலித் இன மக்களை ஒடுக்கப்படும் சாதிகளாகவும், சுரண்டப்படும் வர்க்கமாகவும், புரட்சிகரத் திறன் கொண்ட சமூகப் பிரிவினராகவும் காணவேண்டியுள்ளது. ஆதலால் தலித் இலக்கியத்தைச் சனநாயக இலக்கியத்தின் ஒரு பகுதி என்ற விதத்தில் அதைப் பொதுவுடைமை இயக்கத்தோடு தொடர்புபடுத்தி இணைக்கலாம்.

தலித்துக்களால் படைக்கப்படும் இலக்கியங்களும், தலித் உணர்வுள்ள பிறர் தலித்துக்களைப் பற்றி எழுதுவதும் தலித் இலக்கியங்களே எனலாம்.

சங்க இலக்கியங்களில் வேட்டைத் தொழில்

பேராசிரியர் பெ.சுயம்பு

தொழில்களின் வரலாற்றில் வேட்டையாடுதல் முதற்சுழியாக விளங்குகிறது. மனிதன் உள்ளிட்ட இவ்வுலக உயிரினங்களின் வாழ்க்கை வரலாற்றில் இத்தொழிலே தொடக்கமாக உள்ளது. வேட்டைத் தொழில் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

சொல் விளக்கம்

சங்க இலக்கியங்களில் வேட்டம், வேட்டை, வேட்டு எனும் மூன்று தொழிற்பெயர்ச் சொற்களும் ஒரே பொருளில் காணப்படு கின்றன. இச்சொற்களுக்குத் 'தவிர்க்கவியலாத - மிகுதியான அவா' எனும் பொருள் கொண்ட 'வேள்' என்பது முதனிலை (பகுதி). இஃது வாழ்வியலைச் சிதைவுறாது நிலைப்படுத்திட மேற்கொள்கிற அவா. இது தம் உயிரைப் பேணுவதற்கான இரைதேடுதல், எதிரியை அழித்தல், புகழை நாட்டுதல் போல்வன தொடர்பான அவா.

"இரை வேட்டு எழுந்த கருங்கால் குருகு"
(நற்றிணை, 211)

"முயல் வேட்டு எழுந்த முடுகுவிசைக் கதநாய்"
(நற்றிணை, 252)

"....செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரோடு முரணிச்
சென்று அமர்கடந்து" (புறநானூறு, 99)

"......... போர் வேட்டு
வேறுபல் பூளையொடு உழிஞை சூடி"
(பட்டினப் பாலை, 234–235)

"கடுந்தெறல் செந்தீ வேட்டு" (புறநானூறு, 251)
"மண்நாணப் புகழ் வேட்டு" (புறநானூறு, 384)

வேட்டம், வேட்டை, வேட்டு எனும் மூன்று சொற்களுள் வேட்டம் என்பது இலக்கியங்கள் பலவற்றில் பல இடங்களில் பயின்று வருகிறது. ஆனால் வேட்டை வேட்டு இரண்டும் ஓரிரு இலக்கியங்களில் மட்டும் ஒன்றிரண்டு இடங்களில் காணப்படு கின்றன.

'வேட்டம்' (நற்றிணை, 38,49,67; கலித்தொகை, 46; அகநானூறு 58,70,170; புறநானூறு 31, 152; பொருநராற்றுப்படை 142; பெரும்பாணாற்றுப்படை 111; நெடுநல்வாடை 129; பட்டினப்பாலை 92)

"வேட்டைச்சிறாஅர்" (புறநானூறு, 326)

"............... வேட்டை
நிரைய ஒள்வாள் இளைஞர் பெருமகன்"
(குறுந்தொகை, 258)

"............... வேட்டொடு
வேய்பயில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே" (அகநானூறு, 318)

வேட்டை மாந்தர்

வேட்டைத் தொழில் மலை, காடு, கடல், வயல், பாலை நிலம் எனப் பல இடங்களுக்கும் பொதுவான தொழிலாக இலக்கியங்களில் காணப்படுகிறது. இத்தொழிலுக்கு உரிய மாந்தரினத்தவராக வேட்டுவர், கானவர், எயினர், குறவர் ஆகியோர் குறிக்கப்பெற்றுள்ளனர். இந்நான்கு பெயர்களுள் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரே பாடலில் காணப்படவில்லை. தவிர, தகுதி-தர வேறுபாடு பற்றிய சுவடும் பதிவாகவில்லை.

வேட்டையாடும் தொழிலை உடைய மாந்தர்கள் இரக்கமும் அன்பும் இல்லாத கொடிய உள்ளத்தினர். இவர்களின் உள்ளத்தைப் போன்று உடல் தோற்றமும் அச்சுறுத்தும் தன்மை கொண்டது. 'அன்பில் கானவர்', 'கடுங்கண் கானவன்' 'கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்', 'கொடுவில் எயினர்', 'கூர் நல்அம்பின் கொடுவில் கூளியர்', 'புன்ஊன் தின்ற புலவுநாறு கயவாய் வெள்வாய் வேட்டுவர்', 'கொலைவேல் கோடற்

கண்ணி குறவர்', 'சிலையில் மகிழச் செந்துவர் ஆடைக் கொலைவில் எயினர்' என்றெல்லாம் வேட்டையாடும் மாந்தர் உள்ளம், உடல், உடை, நடை, பாவனை எனும் அனைத்து நிலைகளிலும் கொடியராக விவரிக்கப்பெற்றுள்ளனர். 'கூளியர்' எனும் சொல் இம்மாந்தரைப் பேய்களுக்கு ஒப்பானவர்கள் என்று காட்டுகிறது.

வேட்டையாடுகிற ஆடவர்களைக் கொடியோராகக் காட்டுகிற புலவர்கள், வேட்டுவ மகளிரை இரக்கத்தின் உருவங்களாக விவரித்துள்ளனர். இம்மகளிர் தம் இல்லத்திற்கு வருகிற பாணர்களுக்குத் தயிர்ச்சோற்றுடன் உடும்புக்கறியையும் அளித்து விருந்தோம்புவர் என்று தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் பாடுகிறார்.

"அருமிளை இருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
படப்பைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு ஓராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள்" (புறநானூறு, 326)

வேலூரிலுள்ள எயிற்றியர் தம் குரம்பைக்கு வருவோர்க்குப் புளியோதரையும் காட்டுப்பசுவின் காய்ந்த இறைச்சிக் கூட்டும் வழங்குவர் எனும் செய்தி சிறுபாணாற்றுப்படையில் காணப்படுகிறது.

".... .... வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்புஅவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவிர்"

(சிறுபாணாற்றுப் படை, 73-177)

பெரும்பாணாற்றுப்படையும் எயினர் மகளிரின் விருந்தோம்பும் பண்பினைச் சிறப்பித்துப் பேசுகிறது. ஈந்துமரத்தின் விதையைப் போன்ற பெரிய சம்பா அரிசியாலான செஞ்சோற்றுடன் உடும்புக்

கறியை இம்மகளிர் தம் குறும்புக்கு வருவோர்க்கு வழங்கி மகிழ்வர்.

"கொடுவில் எயினர் குறும்பு சேப்பின்
களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச் சூலுடும்பின்
வறைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்"

(பெரும்பாணாற்றுப்படை, 129-133)

வேட்டுவ மகளிர் மாந்தரிடம் மட்டுமன்றி, விலங்குகளிடமும் பேரிரக்கம் உடையோர். வேட்டுவன் ஒருவனது முற்றத்தில் மான்களைப் பிடித்தற்கு உதவுகிற பார்வைப் பெண் மான் ஒன்று கட்டப்பட்டு நிற்கிறது. ஆண் மான் ஒன்று கட்டப்பட்டுள்ள பெண் மானைத் தழுவி விளையாடுகிறது. வேட்டுவன் இல்லத்தினுள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறான். மான்களை வேட்டுவனின் மனைவி பார்க்கிறாள். குரலெழுப்பி ஆண்மானை விரட்டினால் தனது கணவன் துயிலெழுந்து விடுவான்; ஆண்மானைக் கொல்ல நேரிடும். அருகில் சென்று விரட்டினால் ஆண்மான் ஓடிவிடும். மான்களின் காதல் விளையாட்டுக்கு இடையூறாகி விடும். எனவே செய்வதை அறியாதவளாகி அச்சமும் துன்பமும் கலந்து துடிக்கிறாள்.

"முன்றில் முஞ்ஞையடு முசுண்டை பம்பி
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தென
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி"

(வீரைவெளியனார், புறநானூறு, 320)

வேட்டையாடுதல்

வேட்டைக்குச் செல்லும் முன்னர்ப் பல்லியின் குரலை ஆராய்ந்து சோதிடப் பலனை அறிந்துகொள்ளுதலும் உண்டு.

மீன், முயல், காட்டுப்பன்றி, காட்டுப்பசு, உடும்பு, கடமான், மான், யானை, வெருகுப்பூனை, மயில் போல்வன வேட்டையாடப் பட்டன.

வேடர்கள் வேட்டையாடுதலில் சில தொழில் நுட்பங்களை மேற்கொள்வர். சீழ்க்கையடித்துத் தமது கூட்டத்தினரையும் வேட்டை நாய்களையும் அழைப்பர். வேட்டைப் பொருள்களான விலங்குகளையும் பறவைகளையும் மறைவிடங்களிலிருந்து தமது பார்வைக்கு அல்லது வலைக்கு வருமாறு அழைத்தற்கும் இக்குரல் பயன்படும். வெருகுப்பூனைகளையும் பெண்மான் களையும் பார்வை (பார்வல்) விலங்குகளாகத் தம் இல்லங்களில் வளர்ப்பர். வேட்டையாடச் செல்லும் இடங்களில் இப்பார்வை விலங்குகளை மரங்களில் கட்டியோ கூண்டுகளில் அடைத்தோ வைத்து, குரல் எழுப்பச் செய்வர். குரலொலி கேட்டு வருகிற விலங்குகளை அம்பெய்தி அல்லது வலைகளில் சிக்குமாறு செய்வர். தரையில் பதித்திருக்கிற விலங்குகளின் காலடிச் சுவடுகளைக் கொண்டு விலங்குகளின் இருப்பிடங்களை அறிந்து கொள்ளும் தனித்திறன் வேடர்களுக்கு உரியது.

வேட்டைத் தொழில் அன்றாட உணவிற்காக மேற்கொள்ளப் பெற்றது. வேட்டையாடிய பொருள்கள் சமைத்து உண்ணப்பட்டன. அரிசி முதலிய உணவுப் பொருள்களைப் பிறரிடமிருந்து வாங்குவதற்கான பண்டமாற்றுப் பொருளாகவும் ஏற்கப்பெற்றன.

இரவென்றும் பகலென்றும் பாராது மேற்கொள்ளப்பெற்ற இத்தொழில் எல்லாக் காலத்தும் வெற்றிபெற்றது இல்லை. நீண்ட நேரம் ஓடித் திரிந்து களைப்புற்று வெறுங்கையுடன் இல்லம் திரும்பிய நாள்களும் வேட்டுவர் வாழ்வில் உண்டு. யானை போன்ற பெரிய விலங்குகளை வேட்டையாடியவர்கள் சில நாள்கள் சிறிய பூழ்க்குருவிகளைக்கூடக் காணாது ஏமாற்றம் அடைவர்.

மீன் வேட்டை

இரும்பால் செய்யப்பெற்ற வளைந்த தூண்டிலில் இரையை மாட்டி, குளங்களில் வேட்டுவர் மீன் வேட்டையாடினர். அத்தூண்டிலை வெளியே இழுப்பர். சில வேளைகளில் வரால் மீன்களைக் கொளுக்கிக் கொண்ட தூண்டில் ஆம்பல், குவளை, வள்ளைக்

கொடிகளில் சிக்கிக்கொண்டு, இழுக்க இழுக்க வெளியே வாராது வேட்டுவருக்குப் போராட்டமாக அமைதலும் உண்டு.

"பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்துக்
கொடுவாய் இரும்பின் கோள்இரை துற்றி
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்பு விடுபல்மலர் சிதையப் பாய்ந்து எழுந்து
அரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
கயிறுஇடு கதச்சேப் போல மதம்மிக்கு
நாள்கயம் உழக்கும்" (அகநானூறு, 36)

கயிறு கட்டி இழுக்கவும் வாராது முரண்டு பிடிக்கிற முரட்டுக் காளையை வரால் மீனுக்குப் புலவர் நக்கீரர் ஒப்பிடுகிறார்.

கடலில் மீன் வேட்டையாடுதல் பற்றிப் பட்டினப்பாலை (92) "பாயிரும் பனிக்கடல் வேட்டம்" என்று குறிப்பிடுகிறது.

விலங்கு வேட்டை

கிழங்குகளும், தினைக் கதிர்களும் விளைந்து முற்றிய காலத்து, அவற்றைத் தின்னுதற்காக இரவில் காட்டுப் பன்றிகள் வரும். அப்பன்றிகள் வருகிற திசையை நோக்கியவாறு கானவர் சிறு விளக்கினைக் கோலில் மாட்டிக் காத்திருப்பா.

"முதைச் சுவல்கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடு ஓர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கி
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம்" (அகநானூறு, 88)

இரவு வேளைகளில் தினைப் புனத்தை மேய்வதற்கு வருகிற யானைகளின் காலடி ஓசையைக் கேட்ட கானவர் உயர்ந்த மலைமேலுள்ள ஆசினி மரத்தின்மேல் கட்டப்பெற்றுள்ள பரண்மீது ஏறி நின்று கொண்டு, கவணில் கல்லை வீசி, யானைகளை விரட்டுவர்.

"இடிஉமிழ்பு இரங்கிய விரவுபெயல் நடுநாள்
கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயும் புன்செய் யானை
அடிஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசை கவணையில் கல்கை விடுதலின்"

(கலித்தொகை,41)

இத்தகைய வேட்டை விளைச்சற் பொருள்களைக் காத்தற் பொருட்டு மேற்கொள்ளப்படுவதாகும்.

சங்க இலக்கியங்களில் யானை வேட்டை மேற்கொள்ளப் பெற்றதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. யானைத் தந்தங் களைப் பெறுவதற்காக இவ்வேட்டை நடத்தப்பெற்றுள்ளது. யானை இறைச்சியைத் தின்றதற்கான குறிப்பு காணக்கிடைக்கவில்லை.

"வெண்கோடு நயந்த அன்பில கானவர்
இகழ்ந்து இயங்கு இயவின் அகழ்ந்த குழிசெத்து
இருங்களிற்று இனநிரை தூர்க்கும்
பெருங்கல் அத்தம் விலங்கிய காடே" (அகநானூறு)

"பொருதுதொலை யானைக் கோடு"

(மலைபடுகடாம், 154)

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே"

(புறநானூறு,214)

பன்றி வேட்டை உயிர்க்கு இறுதி பயக்கத்தக்கது. மனிதர் களின் நடமாட்டத்தை அறிந்தால், முடுக்குப்பொந்துகளில் பன்றிகள் ஒளிந்து இருந்து, மனிதர்களை நோக்கி வந்து தாக்கும். எனவே வேட்டையாடுவோரும் மறைந்திருந்து அம்பெய்திப் பன்றிகளைத் தாக்குவர். பன்றிகளைப் பிடித்தற்கு நாய்களின் பங்கும் மிகப் பெரியது.

"................ அல்கல்
வயநாய் எறிந்து வான்பறழ் தழீஇ
இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு

நால்முலைப் பிணவல் சொலிய கான்ஒழிந்து
அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற
தறுகண் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொடுத்துக் கூர்வாய்ப் பகழி" (அகநானூறு, 248)
"பார்வல் வெருகின் கூர்எயிறு" (அகநானூறு, 391)
"பார்வை மடப்பிணை" (புறநானூறு, 320)
"மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதில் நீர்நசைஇக் குழித்த
அகழ்தூழ் பயம்பின் அகத்தொளித்து ஒடுங்கி
புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப்பு ஏனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்டம் அழுங்கின் பகல்நாள்
பகுவாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும் அருஞ்சுரம்"
(பெரும்பாணாற்றுப்படை, 107-117)

இங்கு உருத்திரங்கண்ணனார் வேட்டுவ மாந்தர் மான், பன்றி, முயல் போன்றவற்றை வேட்டையாடுகிற திறத்தைத் தெளிவு படுத்தியுள்ளார்.

ஒப்பில்லாத வேட்டுவன்

வேட்டையாடும் மாந்தர்களின் இனத்தலைவர்கள் அல்லது குறுநில மன்னர்கள் பற்றிய குறிப்புக்களும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. கடையேழு வள்ளல்களுள் ஒருவனான ஓரியை அவனது வில்திறம் பற்றி 'வல்வில் ஓரி' என்று புலவர்கள் குறிப்பிடு கின்றனர். அவனுக்கு இணையான வேட்டுவர் வேறுயாரும் இலர். இதனை வன்பரணர், "ஈங்கு ஓர் வேட்டுவர் இல்லை நின் ஒப்போர்" (புறநானூறு, 152) என்று புகழ்கிறார்.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்

புழல்தலை புகர்க்கலை உருட்டி உரல்தலைக்
கேழற் பன்றி வீழ அயலது
ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம்" (புறநானூறு, 152)

ஓரியின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு வேங்கைப் புலியைத் துளைத்து, கலைமானைக் கொன்று, பன்றியை வீழ்த்தி, புற்றில் ஒடுங்கியிருந்த உடும்பில் பாய்ந்து கொல்லுகிற வலிமை உடையது. அவ்வள்ளல் வேட்டையாடப் பெற்ற மானிறைச்சி முதலிய உணவுகளையும் பொன், மணிக்குவியல்களையும் தம்மிடம் வருவோர்க்கு வழங்கி மகிழ்வான்.

கடிய நெடுவேட்டுவன்

கடிய நெடுவேட்டுவன் எனும் வேட்டுவக் குரிசில் ஒருவனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடுகிறார். அவன் பரிசிலரை மதித்துப் பெருமை செய்து பரிசில் வழங்கும் பண்பினன்.

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின்றி ஈதல் யாம்வேண் டலமே
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ நோயியை யாகுக"

(புறநானூறு,205)

புலவர் பெருந்தலைச் சாத்தனாரின் இப்பாடல் அவர்தம் மானமிகு வாழ்க்கையினையும் நெடுவேட்டுவன் புலவரிடம் பழகிய அன்பின் திறத்தையும் வெளிப்படுத்துகிறது. அவன் பரிசிலரை மதித்துப் பெருமை செய்து பரிசில் வழங்கும் பண்பினன்.

தன்னையும் தன்னைச் சார்ந்த குடும்பத்தையும் பசியின்றிக் காத்தல் வேண்டும் எனும் தற்சார்புக் கடமையின் பொருட்டு வேட்டையாடுதல் தவிர்க்கவியலாத ஒரு தொழிலாகச் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. இது தவிர, யானை, புலி போன்ற காட்டு விலங்குகளிடமிருந்து குடிமக்களையும் விளைச்சற் பயிர்களையும் காத்தற்பொருட்டு மன்னர்களும் சமூகத் தலைவர்களும் வேட்டையாடுதலைப் பொழுதுபோக்காக மேற்கொண்டதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

அரிட்டாபட்டி

முனைவர் வெ.வேதாசலம்

'கழிஞ்சமலை' என்னும் பெயரில் அரிட்டாபட்டியில் அமைந்துள்ள மலை பாண்டியநாட்டு மக்களின் பண்பாட்டுச் சின்னமாகும். சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பாகவே இம்மலையில் **நெல்வேலிச் செழியனும் இமையவனும்** இங்கு நல்லறத்தைப் போதிக்க வந்த சமணத்துறவிகளை ஆதரித்துள்ளனர். அவர்கள் இம்மலையில் வாழ்ந்த குகைப்பள்ளி உள்ளது. இக்குகைப்பள்ளி **'முழாகை'** என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தமிழ்பிராமிக் கல்வெட்டுக்கள் இவ்உண்மையைச் சொல்கின்றன.

'நெல்வெளிய் சிழிவன் அதினன் வெளியன்
முழாகை கொடுபிதோன்'

'இலஞ்சி எளம்பேராதன் மகன் எமயவன்
இம்முழாகை கொடுபிதவன்'

என்பன இங்குள்ள **தமிழ்பிராமி** கல்வெட்டின் வாசகங்கள். இக்கல்வெட்டு உள்ள குகையில் பத்துக்கும் மேற்பட்ட துறவியர் தங்கியிருக்கலாம்.

இக்கல்வெட்டின் அருகிலேயே சுமார் 10 அடி தொலைவில் பாறையில் புடைப்புருவமாக ஒரு சமண தீர்த்தங்கரரின் சிற்பமும் அதனடியில் வட்டெழுத்துக் கல்வெட்டும் காணப்படுகின்றன. விரிந்த தாமரை மலரின் மேல் அர்த்தபரியங்காசனத்தில் முக்குடைக்குக் கீழே தீர்த்தங்கரர் புன்னகையோடு அமர்ந்திருக் கின்றார். பக்கத்தில் இரு குத்துவிளக்குகள், தலைப்பகுதியில் பூ வேலைப்பாடுகள் அவற்றிலும் வண்ண ஓவியங்கள் பாண்டியர் நுண் கலைத்திறனை வெளிப்படுத்தும் விதமாக வரையப் பட்டுள்ளன. சிற்பத்தின் கீழே வெட்டப்பட்டுள்ள கி.பி.10ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு இம்மலையின் வரலாற்றைப் பேசுகிறது. இம்மலையின் பழம்பெயர் **திருப்பிணையன்மலை** என்கிறது. இதற்குத் தெப்பம் என்பது பொருள்.

பிறவிப்பெருங்கடலை நீந்த உதவும் தெப்பமாகத்தீர்த்தங்கரர் இருக்கிறார் என்பதையே இக்கல்வெட்டு உணர்த்துகிறது. 'பாதிரிக்குடி' என்ற பெயர் அரிட்டா பட்டிக்கு வழங்கியதையும் இக்கல்வெட்டே கூறுகிறது. இவ்வூரில் 'பொற்கோட்டுக்கரணத்தார்' என்னும் குழுவினரின் பெயரில் அச்சணந்தி என்னும் துறவி இச்சமணத் திருமேனியைச் செய்துள்ளார். இது சுமார் 900 ஆண்டுகளுக்கு முற்பட்டது. தற்போதுள்ள இவ்வூரின் பெயர் அரிட்டநேமி என்ற 22வது சமணசமயத் தீர்த்தங்கரரின் பெயரால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

'ஸ்ரீ திருப்பிணையன் மலை
பொற்கோட்டுக் கரணத்தார் பேரால்
அச்சணந்தி செய்வித்த திருமேனி
பாதிரிக்குடியார் ரக்ஷை'

என்பது இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டின் வாசகமாகும்.

குடைவரைக் கோவில்

இவ்வூரில் இன்னுமோர் கலைக்கருவூலம் மலையின் மேல் பக்கத்தில் அமைந்துள்ள எழிற்கோலம் கொண்ட குடைவரைக் கோவில் ஆகும். சிவபெருமான் இலிங்க வடிவமாகக் காட்சி தரும் இக்கோவில் பாண்டியர் கலைக்கோர் மகுடம். லகுளீசர் என்னும் அற்புதத் திருவுருவமும், விநாயகரின் உருவமும் கிராமத்துப் போர் வீரரோ என்று வியக்கும் வாயிற்காவலர் சிற்பங்களும் கல்லில் வடிக்கப்பட்ட காவியங்கள். தமிழ்நாட்டில் மிக அரிதான சிற்பமான லகுளீசர் இதுபோன்ற எழிலோடு எங்குமில்லை. லகுளீசர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் குஜராத்தில் காயோவரோகன் (கார்வான்) என்ற இடத்தில் பிறந்தார். சைவ சமயத்தை முறைப்படுத்தித் தம் சீடர்கள் மூலம் இந்தியா முழுவதும் பரவச் செய்தார். இச்சமயத்திற்குப் **பாசுபதசைவம்** எனப்பெயர். பிற்காலத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இது பல்வேறு வடிவம் பெற்றது. இச்சைவம் ஆறாம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் வழியாகவும் ஏழாம் நூற்றாண்டில் அப்பர், ஞானசம்பந்தர் வழியாகத் தமிழகமெங்கும் பரவி வளர்ந்தது. இக்குடைவரைக் கோவிலைப் படைத்து உருவாக்கிய சிற்பியின் பெயரோ அல்லது

அவனுக்குப் பொருள் கொடுத்த மன்னனின் பெயரோ இங்குக் கல்வெட்டாக வெட்டப்படவில்லை. மக்கள் இதனை இடைச்சி மண்டபம் என அழைக்கின்றனர்.

இவ்வூரின் வரலாற்றுத் தொடர்ச்சி இத்தோடு முற்றுப்பெற்று விடவில்லை. இவ்வூரில் திறந்த வயல்வெளியில் ஒரு சிதைந்து போன பாண்டியர் சிவன்கோவில் உள்ளது. அதிலுள்ள ஒரு கல்வெட்டு **ஜடாவர்மன் விக்கிரம பாண்டியன்** காலத்தது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வூர் ஒரு சிறந்த வணிக மையமாகத் திகழ்ந்தது என்பதைக் கூறுகிறது. இக்கல்வெட்டால் **ஐந்நூற்றுவப் பெருந்தெரு** எனப்பெயர் இப்பகுதிக்கு இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. திருமலைநாயக்கர் காலத்தில் இப்பகுதியில் அந்நியர் படை புகாமல் காத்து மக்களுக்கு அறிவிக்கை செய்த ஒரு சேவகனுக்கு வழங்கப்பட்ட மானியம் பற்றிய விபரத்தைச் செவிவழிச் செய்தி ஒன்று கூறுகிறது.

அண்மையில் இவ்வூரில் கண்டறியப்பட்ட முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு **ஆனைகொண்டான் குளத்தை** அவனது அதிகாரி தோற்றுவித்ததைக் கூறுகிறது.

14.6.2015 ஞாயிறு அன்று பேராசிரியர் வெங்கட்ராமன் தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர் வெ.வேதாச்சலம் மற்றும் நிறைந்த பெருமக்களோடும் அரிட்டாபட்டி மலையில் உள்ள சமணர் படுக்கை, குடைவரைக் கோயில்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அரிட்டாபட்டியில் சமணர்கள் வாழ்ந்த மலையின் பெயர் "கழிஞ்சமலை" என்று அழைக்கப்படுகிறது. அப்போது எனக்கு,

"மாற்ற அருங்கூற்றம் சாற்றிய பெருமையும்
"கழிந்தோர்" ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புஉற வரூஉம் பகுதி",
"பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்
அருளொடு புணர்ந்த அகற்சியானும்
காமம்நீத்த பாலினானும்"

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் நினைவிற்கு வந்தன. அதனொடு புறப்பொருள் வெண்பாமாலை

"வையகத்து விழை வறுத்து
மெய்யா பொருள் நயந்தன்று"

நூற்பாவும் எண்ணத் தோன்றியது. மெய்யா பொருள் நயந்து ஆறா இயற்கை அவாநீத்த பெரியோர் உலகியல் பற்றினை விட்டு, உலக வாழ்வின்மேல் உள்ள பிடிப்பு விட்டுக் கழிந்த பின்னர்த் தங்கிய மலை "கழிஞ்ச மலை" எனப்பெயர் பெற்றதாகத் தோன்றியது.

உலக வாழ்க்கை பெரும் சிறப்பு எய்துவது வாழ்வின் நிலையாமை உணர்ந்து இவ்வாழ்க்கையின் மேல் வலிந்து நாம் கொண்டுள்ள ஆசையின் காரணமான பிடிப்பினை விட்டு, அருள் நெறியில் நிற்கின்ற உறுதிப்பாட்டில் அமைந்துள்ளது. இறுதிக்காலம் வரை யான், எனது என்னும் செருக்குமிக்கு வாழ்க்கை பயனின்றிக் கழிவதை "நில்லா உலகம் புல்லிய நெறித்தே" என்னும் தொடர் அறிவுறுத்துகிறது.

உலகியல் நடையாகிய இளமை அதன் வலிமை அவ் வலிமையாலும் தொழில் ஆளுமையாலும் பொருளீட்டல்,

முதுமைக் காலத்து அப்பொருளை என்ன செய்வது என்று தெரியாத மக்களோடு வேறுபட்டுத் துன்புற்றுக் கழிகின்ற பெரும்பான்மையான மக்கட் கூட்டத்தை நன்னெறிப்படுத்தும் நோக்கோடு எவ்வாற்றானும் தவிர்க்க முடியாத சாக்காட்டை நினைந்து வருந்தாமல் உலகியல்பாகிய காமம் நீத்து அருளாகிய பொருளை நினைந்து வாழ அறிவுறுத்துவோர் அருளாளர்கள்.

பெரும்பான்மையாகிய மக்களுக்கு அறிவுறுத்துவான், பாங்கருஞ்சிறப்பின் பல்லாற்றானும்; இளமை முதல் பரிந்து ஓம்பிக் காத்த ஒழுக்கத்தின் பேற்றால்; நிலைபேறு அற்ற உலகத்தின் புன்மை உணர்த்தும் தகுதி உடையவர் சான்றோர்.

வஞ்சிப்பது அவா என்பதை உணர்ந்த பெருமக்கள் அறிவினால் மெய்யுணர்வு பெறத் தங்கியிருந்த மலை கழிஞ்ச மலை என்ற உணர்வு தோற்ற பறைசாற்றி நிற்கும் மலை கழிஞ்சமலை; கழிஞ்சமலை என்னும் தொடர் பொருள் பொதிந்தது எனலாம்.

"அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா"

என்னும் திருக்குறளை ஓர்க.

இன்னும் ஓர் செய்தி காண்க. இங்குள்ள ஒரு கல்வெட்டு இவ்வூர் ஒரு சிறந்த வணிக மையமாகவும் **"ஐந்நூற்றுவப் பெருந்தெரு"** எனப் பெயர் இப்பகுதிக்கு இருந்ததையும் அறிவிக்கிறது.

சமணர்களும் பௌத்தர்களும் பெருவணிகக்குழுக்கள் பயணிக்கும் நெடுஞ்சாலையில் தங்கி இருக்கும் வழக்கம் உள்ளவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அரிட்டாபட்டிப் பகுதி ஐந்நூற்றுவப் பெருந்தெருவை உள்ளடக்கியது என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், பாண்டிநாட்டுக் கொற்கை ஆலங்குளம் ஆகியவை வணிகப்பெருஞ்சாலையில் இருந்ததும்

தமிழ்நாட்டோடு ரோமானியர்கள் வாணிகம் செய்ததாகவும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

தற்போது அகழ்வு ஆராய்ச்சி நடைபெறும் குந்திதேவி சதுர்வேதி மங்கலம் எனப்படும் கொந்தகை, கீழடி பள்ளிச்சந்தை ஆகிய இடங்கள் அரிட்டாபட்டி ஐந்நூற்றுவப் பெருந்தெரு வணிகச் சந்தையின் நேர்கோட்டில் அமைந்திருப்பதை எண்ணும்போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இப்பகுதி வளம் மிக்க வணிகப் பெருஞ்சாலையாகவும் நாகரிக மையமாகவும் விளங்கியதை உணரமுடிகிறது. "பள்ளி" என்பது சமணப்பள்ளியாக இருந்ததன் அடையாளம் என்ற நோக்கிலும் சிந்திக்க இடம் இருக்கிறது.

செய்தி: பேராசிரியர் **இரா.சதாசிவம்**

செந்தமிழ் இதழாசிரியர்

செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	தலைவர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	செயலாளர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. ச.தசரதராமன் B.A.,B.L.,	உறுப்பினர்
திரு. து.மாயராசன் B.Sc., B.L.,	உறுப்பினர்
திரு. இரா.ஜெகனாதன் B.E.,	உறுப்பினர்
திரு. லெ.சிவக்குமார் B.E.,	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc.,	உறுப்பினர்
திரு. கி.ராஜாராம் B.A.,	உறுப்பினர்
முனைவர் க.பாலகிருஷ்ணன்	பல்கலைக்கழக நியமன உறுப்பினர்
முனைவர் சு.விஜயன்	உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா	உறுப்பினர்

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, ராசராசன் தெரு, மதுரை - 20, செல்:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-9.